# செய்தி வெளியீடு

## மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம்

### இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள பகுதிநேர மற்றும் சிறப்பு காலமுறை தூய்மைப் பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு

| வ. எண். | பதவி | காலிப் பணியிடம் | தொகுப் பூதியம் | இனச்சுழற்சி (ஆண்) | |
|---|---|---|---|---|---|
| | | | | Priority | Non-Priority |
| 1. | பகுதிநேர தூய்மைப் பணியாளர் (தொகுப்பூதியம்) | 12 | ரூ. 3,000/- Per Month | 1. GT- 01, (முதல் பட்டதாரி)<br>2. SC- 01 (தமிழக அரசுப்பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற நபர்கள்)<br>3. ST- 01 (கொரனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்) | 1. GT- 01 (மாற்று திறனாளி - காதுகேளாதோர்)<br>2. GT- 01<br>3. BC (O) – 03<br>4. BC - 01<br>5. SCA- 01<br>6. MBC/DNC- 02 |
| | | | | இனச்சுழற்சி (பெண்) | |
| | | | | Priority | Non-Priority |
| 2. | பகுதிநேர தூய்மைப் பணியாளர் (தொகுப்பூதியம்) | 03 | ரூ. 3,000/- Per Month | 1. GT- 01 (கொரனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்) | 1. BC- 01<br>2. MBC/DNC- 01 |

மேற்கண்ட பகுதிநேர தூய்மைப் பணியாளர் (ஆண்/பெண்) காலிப்பணியிடங்கள் நேர்காணல் மூலம், இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்
2. வயது வரம்பு: 1.7.2022 தேதியில் SC/ST - 18 முதல் 37, BC,BCM,MBC&DNC - 18 முதல் 34, இதர பிரிவினர் 18 முதல் 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

மேற்படி தகுதிகளுடன் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விடுதிகளில் பகுதிநேர தூய்மைப் பணியாளர் (தொகுப்பூதியம்) பணி புரிய விருப்பம் உள்ளவர்கள், உரிய விண்ணப்ப படிவத்தில் பூர்த்தி செய்து உரிய சான்றுகளின் நகல் இணைத்து சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி அதனை புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 30.05.2022 தேதிக்குள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து, அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் மீது அரசு பரிசீலிக்காது எனவும் மனுதாரரே முழுப்பொறுப்பு எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மனுதாரர்களை மேற்கண்ட தகுதியின் அடிப்படையில் விண்ணப்பம் செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், பகுதிநேர தூய்மைப் பணியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் கூடுதல் விபரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது பத்திரிக்கைச் செய்தி வாயிலாக கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் விவரங்களுக்கு www.pudukkottai.nic.in என்ற இணைய தளத்தை காணவும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை.